මධ්‍යම පළාත් ආදායම් දෙපාර්තමේන්තුව
மத்திய மாகாண இறைவரித் திணைக்களம்
Department of Provincial Revenue - Central Province

විමසීම් / விசாரினை / Inquiries 081-2213022 081-2213166
244, කටුගස්තොට පාර, මහනුවර.
244, கட்டுகஸ்தொட்ட வீதி, கண்டி.
244, Katugastota Road, Kandy.
Web: www.revenuedept.cp.gov.lk
Email: info@revenuedept.cp.gov.lk
cpcrevenue@gmail.com

ජ්‍යෙෂ්ඨ තක්සේරුකරුවන් / சிரேஷ்ட மதிப்பீட்டாளர்கள் / Senior Assessors 081-2213165 081-2213031
නියෝජ්‍ය කොමසාරිස් / பிரதி ஆணையாளர் / Deputy Commissioner 081-2213045
කොමසාරිස් / ஆணையாளர் / Commissioner 081-2213021
ෆැක්ස් / பெக்ஸ் / Fax 081- 2213033

**மத்திய மாகாணத்து மாகாண சபையின் 2014 ஆம் ஆண்டின்**
**04 ஆம் இலக்க அடகு பிடிப்போர் நியதிச் சட்டம்**
செயற்படுத்தப்படும் திகதி: 2016.01.01.

அடகு பிடிக்கும் தொழிலொன்றை நடத்திச் செல்வோர் கடைப்பிடிக்கவேண்டிய சட்ட வலுவான ஏற்பாடுகள் வருமாறு:

| ஏற்பாடுகள் | ஏனைய விடயங்கள் |
|---|---|
| **பதிவு செய்தல்**<br><br>1. அடகு பிடிக்கும் தொழிலான்றுக்கான அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ள உத்தேசிக்கும் ஒருவர் தமது தொழிலை ஆரம்பிக்க முன்னர் இறைவரி ஆணையாளரிடம் அதற்கான பதிவைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.<br><br>பதிவுக் கட்டணம்: ரூ 25,000/- | **முன்வைக்கப்படவேண்டிய ஆவணங்கள்**<br><br>1. பதிவுசெய்வதற்கான விண்ணப்பப் படிவம்<br>2. சட்டவிரோதச் செயற்பாடுகள் மேற்கொள்ளப் படவில்லை என்பதற்கான / அல்லது நீதிமன்றத்தில் குற்றமொன்றுக்கென குற்றவாளியாக்கப்படவில்லை என்பதற்கான சத்தியக் கடதாசி.<br>3. நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்ட ஒருவர் அல்லது அவர்மீது வழக்கொன்று நடைபெறுகின்றதெனவும், வழக்கு தொடர்பான அனைத்து விபரங்களையும் கொண்ட சத்தியக் கடதாசி.<br><br>நியதிச் சட்டத்தின் 8 (3) ஆவது பிரிவுக்கமைய இந்தத் தொகையை அமைச்சர் காலத்துக்குக் காலம் வர்த்தமானியின் மூலம் தீர்மானம் செய்வார். |
| **வருடாந்த அனுமதிப்பத்திரம் பெறுதல்**<br><br>1. ஓவ்வொரு வர்த்தக நிலையத்துக்கும் அல்லது கிளைக்கும் எனத் தனித்தனியான அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். அடகுபிடிக்கும் அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளாது அடகு பிடிக்கும் தொழிலை நடத்திச் செல்லக் கூடாது.<br>2. ஓவ்வொரு அனுமதிப்பத்திரமும் அதலி குறிப்பிடப்பட்டுள்ள வர்த்தக நிலையத்துக்கும், குறித்த பஞ்சாங்க வருடத்துக்கும் மட்டுமே செல்லுபடியாகும்.<br>3. வழங்கப்பட்டுள்ள அனுமதிப் பத்திரத்தை வேறொருவருக்குக் கைமாற்றம் செய்வதாயின் இறைவரி ஆணையாளரது எழுத்து மூல அனுமதியைப் பெறுதல் வேண்டும்.<br>4. வழக்கிலுள்ள அனுமதிப்பத்திரம் காலாவதி ஆவதற்கு 2 மாதங்களுக்கு முன்னர் புதிய அனுமதிப் பத்திரத்துக்காக விண்ணப்பம் செய்தல் வேண்டும். | **வருடாந்த அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதற்காக முன்வைக்கப்படவேண்டிய ஆவணங்கள்**<br>**(7 ஆவது பகுதி)**<br><br>1. விண்ணப்பப் படிவம்<br>2. சட்டவிரோதச் செயற்பாடுகள் மேற்கொள்ளப் படவில்லை என மற்றும் / அல்லது நீதிமன்றத்தில் குற்றமொன்றுக்கென குற்றவாளியாக்கப்படவில்லை என்பதற்கான சத்தியக் கடதாசி.<br>3. நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்ட ஒருவர் அல்லது அவர்மீது வழக்கொன்று நடைபெறுகின்றதெனவும், வழக்கு தொடர்பான அனைத்து விபரங்களையும் கொண்ட சத்தியக் கடதாசி.<br>4. வர்த்தகப் பெயர்களைப் பதிவு செய்யும் சான்றிதழ் அல்லது கம்பெனி எனின், கம்பெனிகள் பதிவுசெய்த சான்றிதழ் மற்றும் நிறுவகத்தின் யாப்பின் ஒரு பிரதி (முன்னருள்ள நிதியாண்டின்)<br>5. முன்னருள்ள ஆண்டின் வருடாந்த கணக்கறிக்கைகள் |

| | |
|---|---|
| 5. வருடாந்த அனுமதிப்பத்திரத்தை உரிய காலத்துக்குள் புதுப்பிக்காது வர்த்தகத்தை நடத்திச் செல்வதற்கான தண்டம்:<br><br>1.அனுமதிப்பத்திரக் கட்டணமும் கடந்து சென்ற ஒவ்வொரு மாதத்துக்குமென அனுமதிப் பத்திரக் கட்டணத்தின் 10% தாமதக் கட்டணமும்.<br><br>6. வருடாந்த அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளாது வர்தத்கத்தை நடத்திச் செல்வதற்குரிய தண்டம்:<br><br>1.அனுமதிப்பத்திரக் கட்டணமும் கடந்து சென்ற ஒவ்வொரு மாதத்துக்குமென அனுமதிப்பத்திரக் கட்டணத்தின் 20% தாமதக் கட்டணமும்.<br><br>வருடாந்த அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூ 5,000/- | 6. நியதிச் சட்டத்தின் 30 ஆவது பிரிவின்படி அடகுப்பொருளின் மொத்தப் பெறுமதிக்கும், வர்த்தகத்தைத் திறந்துவைத்திருக்கும் மொத்தக் கால அளவுக்கும் என முழுப் பொறுப்பை ஏற்கும் காப்புறுதிச் சான்றிதழ். |
| **வைப்புத் தொகை ரூ 100,000/-**<br><br>ஒவ்வொரு அனுமதிப்பத்திரதாரியும் வைப்புத் தொகையைத் தேசிய சேமிப்பு வங்கியில் மாகாண இறைவரி ஆணையாளரது பெயரில் வைப்புச் செய்தல் வேண்டும். வர்த்தகத்தைக் கைமாற்றம் செய்யும்போதும் அதனை ஒடுக்கும்போதும் மட்டுமே இத்தொகை மீளளிப்பு செய்யப்படும். | நியதிச் சட்டத்தின் 10 (3) ஆவது ஏற்பாடுகளின் கீழ் இந்தத் தொகை அமைச்சரால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்பட்டு வெளியிடப்படும். |
| **அனுமதிப்பத்திரம் வழங்குவதை நிராகரிக்கச் செய்யும் சந்தர்ப்பங்கள்,**<br><br>1. அனுமதிப்பத்திரம் பெற விண்ணப்பிக்கும் அண்மித்த 5 வருட காலத்துக்குள், குற்றவியல் தண்டக் கோவையின் xi, xiii, xvii, xviii ஆகிய பந்திகளின் கீழ் மற்றும் / அல்லது,<br><br>2. அளவை, நிறுத்தல் கட்டளைச் சட்டத்தின் கீழ் மற்றும் / அல்லது,<br><br>3. இந்த வரைவுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் குற்றமொன்றுக்காக குற்றவாளியாகக் கருதப்பட்டவர் மற்றும் / அல்லது,<br><br>4. பதிவு செய்வதற்கு மற்றும் / அல்லது அனுமதிப்பத்திரம் பெறுவதற்கென 8 ஆவது பந்தியின் கீழ் முன்வைக்கப் படவேண்டிய ஆவணங்கள் முன்வைக்காமை மற்றும் / அல்லது,<br><br>5. வருடாந்த கணக்கு அறிக்கைகளை முன்வைக்காத சந்தர்ப்பத்தில் மற்றும் / அல்லது, வரைவுச்சட்டத்தின் (12) ஆவது பிரிவின் கீழ் அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்திருந்தால் மற்றும் / அல்லது, | |

| | |
|---|---|
| 6. செல்லுபடியாகவுள்ள அனுமதிப் பத்திரத்தின் காலம் முடிவடைந்திருந்தால் மற்றும் / அல்லது, எதிர்வரும் வருடத்துக்கான அனுமதிப்பத்திரம் பெறாது உள்ளமை பற்றி நியதிச் சட்டத்தின் 13 (2) ஆவது பிரிவின் கீழ் வர்த்தமானி மற்றும் பத்திரிகை வெளியீட்டின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தால் மற்றும் / அல்லது,<br><br>அனுமதிப் பத்திரத்துக்கென விண்ணப்பித்தவர் ஒரு ஏலதாரர் எனின்,<br><br>குறித்த அனுமதிப்பத்திரம் வழங்குவதை இறைவரி ஆணையாளர் நிராகரிக்க முடியும்.<br><br>**அனுமதிப்பத்திரதாரிகள் கடைப்பிடிக்கவேண்டிய நிபந்தனைகள்:**<br><br>1. மூன்று மாதங்களுக்கு அதிகமான காலம் இலங்கைக்கு வெளியே இருக்கும் எண்ணம் கொண்டிருப்பின், தமக்காக வேலைகளை மேற்கொள்வதற்கென நியதிச் சட்டத்தின்கீழ் அனுமதிப்பத்தரத்தைப் பெற்றுக்கொள்ள உரித்துள்ள ஒருவரைப் பெயரிட்டு, அது பற்றிய எழுத்துமூல அனுமதியை இறைவரி ஆணையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளல் வேண்டும்.<br><br>2. அடகு பிடிப்பவர் ஒரு ஏலதாரராகச் செயற்பட முடியாது. | |
| நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின்படி பேணப்படவேண்டிய ஆவணங்கள், படிவங்கள் என்பவை தொடர்பில் அனுமதிப்பத்திரதாரி விசேட கவனத்துடன் செயற்படுதல் வேண்டும். | சிங்களம், தமிழ்,ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் குறிப்பிடப்படுதல் வேண்டும். |
| **வட்டி விகிதம்**<br><br>அடகுபிடிப்பவரால் வழங்கப்படும் கடனுக்கென இந்த நியதிச் சட்டத்தின் அட்டவணை 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள அளவுக்கு மேற்படும் வட்டியை அறவிடுதல் கூடாது. | கடனாக வழங்கப்படும் ஒவ்வொரு ரூபாவினதும் பகுதிக்குமென வட்டி விகிதமாக மாதத்துக்கு அல்லது மாதத்தின் ஒரு பகுதிக்கு 2 சதத்துக்கு மேலதிகமாக அறவிடுதல் கூடாது. (அட்டவணை 2 ஐப் பார்க்க) |
| **அடகுப் பொருளை ஏலத்தில் விடுதல்**<br><br>அடகுப் பொருளை ஏலத்தில் விடுவது தொடர்பாக நியதிச் சட்டத்தின் 3 ஆவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளைகளை அடகு பிடிப்பவர் கடைப்பிடித்தல் வேண்டும்.<br><br>கடன் வட்டி மற்றும் வரியைவிடக் கூடிய தொகைக்கு ஈட்டுப்பொருள் விற்பனை செய்யப்படும்போது அதற்கான நடைமுறைகளில் விசேட கவனம் செலுத்துதல் வேண்டும். | அடகுப்பொருட்களை ஏலத்தில் விடுவதற்கு முன்னர் இறைவரி ஆணையாளரிடமிருந்து அதற்கான எழுத்துமூல அனுமதியைப் பெறுதல் வேண்டும். அவ்வாறு அனுமதியைப் பெற்ற பின்னர் ஏலவிற்பனைக்கு முன்னர் குறைந்தது 14 நாட்களுக்கு முன்னர் திகதி/ நேரம்/ இடம் பற்றிய அறிவித்தலை அடகுவைத்தவருக்குப் பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.<br><br>உரிய கருமங்களை இறைவரி ஆணையாளர் மேற்பார்வை செய்வார். |

| | |
|---|---|
| **வர்த்தக நிலையங்களது பரிசீலனை**<br><br>இறைவரி ஆணையாளரது அதிகாரங்களின் கீழ் அடகு பிடிக்கும் நிலையமொன்றை ஏதேனும் ஒரு நேரத்தில் உட்சென்று அடகுப்பொருட்கள் / ஏடுகள்/ ஆவணங்கள் என்பவற்றைப் பரிசோதித்துத் தேவையான குறிப்புகளை எடுத்துக்கொள்வது சட்டபூர்வமானதாகும். | இறைவரி ஆணையாளர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற அரச அல்லது மாகாண அரச சேவை அலுவலர் அல்லது அலுவலர் குழுவினரால் இந்த அதிகாரங்களைச் செயற்படுத்துவர். அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தல் கூடாது. |
| **அடகு பிடிப்போரால் மேற்கொள்ளப்படும் தவறுகள்**<br><br>தவறுகள் பற்றிய விபரங்கள் நியதிச் சட்டத்தின் 40 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளன. | உரிய குற்றங்கள் தொடர்பில் இறைவரி ஆணையாளரால் மேற்பார்வை செய்யப்படும். நீதிமன்றம் விதிக்கும் இதற்கான தண்டனைகளை 44 ஆவது பிரிவில் பார்க்கலாம். |
| **வர்த்தகத்தின் உரிமையை மாற்றுதல் மற்றும் அதனை ஒடுக்குதல்**<br><br>அடகு பிடிக்கும் வர்த்தகமொன்றை நடத்திச் செல்லும் ஒருவர், அவரது இறப்பின் பின்னர் வர்த்தகத்தை நடத்திச் செல்வதற்கென ஒருவரைக் குறிப்பிட்டு சத்தியக் கடதாசியொன்றை முன்வைத்தல் வேண்டும்.<br><br>பங்குடைமையாக அடகு பிடிக்கும் வர்த்தகத்தைச் செய்வதாயின், வர்த்தகத்தைக் கலைக்கும்போது அடகு வைத்தோரது உரிமைகள் பாதுகாக்கப் படுவதற்கான உரிய ஏற்பாடுகளைப் பங்குடைமை ஒப்பந்தத்தில் செய்திருத்தல் வேண்டும்.<br><br>வர்த்தகத்தை எப்போதேனும் ஒரு தினத்தில் வேறொருவருக்குச் சாட்டுதல் செய்வதாயின், குறித்த திகதிக்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் அதற்கென இறைவரி ஆணையாளருக்கு விண்ணப்பித்தல் வேண்டும்.<br>அடகுபிடிக்கும் வர்த்தகத்தை ஒடுக்குவதற்கான உத்தேசம் உள்ளதெனின், குறித்த தினத்திலிருந்து மூன்று மாதங்களுக்கு முன்னர் அதனை இறைவரி ஆணையாளரிடம் முன்வைத்தல் வேண்டும். இதற்குரிய விபரங்கள் 46 ஆவது பிரிவில் தரப்பட்டுள்ளன. | வர்த்தகத்தைச் சாட்டுதல் செய்வதற்கென இறைவரி ஆணையாளரிடமிருந்து எழுத்துமூல அனுமதியைப்பெறுதல் வேண்டும்.<br><br>அவ்வாறின்றேல், இறைவரி ஆணையாளரால் அனுமதிப்பத்திரம் வழங்குவது மறுக்கப்படும்.<br><br>எழுத்துமூல வேண்டுகோள் கிடைக்கப்பெற்ற ஒரு பஞ்சாங்க மாதத்துக்குள் தமது தீர்மானத்தை இறைவரி ஆணையாளர் எழுத்துமூலம் அறிவிப்பார். |
| **நிலுவைத் தொகையை அறவிடுதல்**<br><br>இந்த நியதிச் சட்டத்தின் கீழ் செலுத்தப்படவேண்டிய ஏதும் தொகை செலுத்தப்படாது விடுபட்டுள்ளதெனின், அதனை அறவிடுவதற்கான ஏற்பாடுகள் நியதிச் சட்டத்தின் 51 ஆவது பிரிவில் காட்டப்பட்டுள்ளன. | இந்த நியதிச் சட்டத்தின் கீழ் அறவிடப்படவேண்டிய நிலுவைத்தொகையை அறவிடுவதற்கென இறைவரி ஆணையாளர் குறித்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தினத்துக்கு முன்னர் செலுத்தப்படவேண்டுமென அடகுபிடிப்பவர் அல்லது பொறுப்பைச் சாட்டுதல் செய்யப்பட்டவருக்குப் பதிவுத் தபாலில் அறிவிப்பார். அவ்வாறு செலுத்தப்படாத ஏதும் தொகை நிலுவைத்தொகை எனக் கருதப்பட்டு அறவிடப்படுவதற்கு அதிகாரமுண்டு. |